# கதை கதையாம் காரணமாம்




**தமிழ் ஐயா வெளியீட்டகம்**

ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதை கதையாம் காரணமாம் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி<br>(பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046<br>(சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம்,<br>திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-IV) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 528 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |

கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் **11-07-2015** அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

15. தமிழில் வரலாற்றுக் கதைகள் திருக்குறள் கதைகள் புள்ளும், பொய்யாமொழியும்
முனைவர் க.சந்திரசேகரன் 77

16. திருக்குறள் கதைகள் தவக்கோலம் ஒரு கருவி
கவிஞர் இரா. சுப்பிரமணியம் 84

17. திருக்குறளில் சிறுகதைக் கூறுகள் ஓர் ஆய்வு
முனைவர் எல். மேகலா 90

18. சிலப்பதிகாரத்தில் கதைத்தமிழ்
அ. கோவிந்தன் 96

19. கதைத்தமிழ் வளர்ச்சியில் சிலப்பதிகாரம்
க. விசயராகவன் 102

20. மணிமேகலையில் ஆபுத்திரன் வரலாறு
முனைவர் க. சித்ரா 109

21. நீலகேசி கதை வடிவங்கள்
முனைவர் இரா.மணிமேகலை 114

22. செவிவழிக் கதைகளில் ஔவையார்
மு. கவிதா 121

23. ஔவையாரின் பிறப்புக் கதைகள்
முனைவர் இலலிதாசுந்தரம் 126

24. ஆத்திசூடி கதைக் கூறுகள்
முனைவர் வே. சசிரேகா 130

25. ஔவையார் அறநெறிக் கருத்துக்களில் வந்த அற்புதக் கதைகள்
ஆ. தனுசு இராமச்சந்திரன் 134


**ஆ. சமயக் கதைகள்**


26. புத்தர் நெறிக் கதைகள்
முனைவர் த.நாகம்மாள் 139

27. சிலம்பில் கிளைக்கதைகள்
பெ. தாமரைச்செல்வி 146

28. கம்பராமாயணத்தில் இரணியன் கதை இருத்தலும் இயங்கலும்
முனைவர் க. முருகேசன் 151

29. மகாபாரதத்தில் கிளைக்கதை
கி. அகிலாண்டேசுவரி 158

# 21. நீலகேசி கதை வடிவங்கள்

**முனைவர் இரா. மணிமேகலை**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

## முன்னுரை

சமய நூல்கள் மெய்யியல் உண்மைகளையும், பக்தி உணர்வினையும், அறக்கோட்பாடுகளை மட்டும் எடுத்துரைப்பதன்றி நூல் எழுந்த காலத்தின் மக்கள் வாழ்க்கை முறை, அரசியல் நிலைப்பாடு, மொழிப்பயன்பாடு, வழிபாட்டு முறைகள், நாட்டு வரலாறு போன்றவற்றையும் வெளிப்படுத்தகின்றன. அவ்வகையில் தமிழ்மொழியின் பெருங்காப்பியங்கள், சிறுங்காப்பியங்களுக்கான வரையறையை இலக்கண நூல்கள் இயம்புகின்றன. ஐஞ்சிறுகாப்பியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்பெறும் நீலகேசி எனும் சமண இலக்கிய நூலினைக் குறித்த ஆய்வு இக்கட்டுரையில் இடம் பெறுகிறது. நீலகேசி காப்பியம் கதைகளின் பின்புலத்தில் மெய்யியல் கருத்துக்களை உரைக்கின்றது.

சமண உண்மைகளைத் தருக்க முறையில் விளக்கும் இந்நூல் முழுமையான, தமிழின் முதன்மையான தருக்க நூலாக விளங்குகிறது. பௌத்த சமயத்தின் குண்டலகேசி எனும் நூலினை மறுப்பதற்கே நீலகேசி எழுந்தது. இந்நூலை எழுதியவர் பெயர் அறியமுடியவில்லை என்றாலும் சமயவதிவாகர வாமனமுனிவர் இந்நூலுக்கு உரை இயற்றியுள்ளார். மிகச்சிறந்த தத்துவ நூலாகிய நீலகேசியின் முதல் பதிப்பாசிரியர் சக்ரவர்த்தி நயினார் ஆவார். ஓலைச்சுவடியிலிருந்த நீலகேசியைச் சமயவாதிகார வாமன முனிவரின் உரையுடன் முதன்முதலில் பதிப்பித்த பெருமை அவரையே சாரும். 1936-ல் வெளிவந்த இப்பதிப்புக்குப் பின்னர் 1964-ல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் இயற்றிய விளக்கவுரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இச்செய்தியை இந்நூலுக்குச் சமயதிவாகரர் என்னும் பேராசிரியரால் பழைய உரையொன்று உண்டு. அவ்வுரை செய்யுட்கள் தோறும் பொருளும் விளக்கமும் பெருக அமையாவிட்டாலும் ஓரோரிடங்களில் கலப்பு நடையாகிய மணிப்பிரவாளமாகவும் அமைந்துள்ளது. அப்பழைய உரை நூலை 1936ஆம் ஆண்டு பேராசிரியர் அ.சக்கரவர்த்தி நயினார் எம்.ஏ.